பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியவர்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

முரசொலி

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எல்எல்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 26 (12—10—72) வியாழன் வெளியூர்: புரட்டாசி 27 (13—10—72) வெள்ளி [இதழ்: 99

சென்னையில் கண் சிகிச்சை முகாம்

சென்னை, அக். 12—

நுங்கம்பாக்கத்தில் மாகராட்சி மாளிர் உயர்நிலை பள்ளியில் இம்மாதம் 20-ந் தேதி முதல் நவம்பர் 5-ந் தேதி வரையில் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடைபெறும்.

சென்னையில் நுதக்கப்படும் முதலாவது இலவசக் கண் சிகிச்சை முகாமாகும் இது. நவம்பர் 3-ந் தேதி முகாமில் சிகிச்சை பெற்றவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை முதலமைச்சர் கலைஞர் வழங்குவார்.

கதர்--கிராமத் தொழில் வளர்ச்சி

கணிசமான நிதி ஒதுக்க டில்லியிடம் கோரிக்கை

தஞ்சாவூர், அக். 12—

தமிழ்நாட்டில் கதர் -- கிராமக் கைத்தொழில் வளர்ச்சிகுக் கணிசமான நிதி ஒதுக்கும்படி அனைத்திந்தியக் கதர் குழுவைத் தமிழக அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

கதர் -- கிராமக் கைத்தொழில் வளர்ச்சிகு ரூ. 40 கோடி செலவிலான ஒரு திட்டத்தைக் குழு தயாரித்துள்ளது.

இத்தகவல், உணவு அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி கூறினார்; அவர் மேலும் தெரிவித்தாவது :—

"டன் மரத்திலிருந்து நார் உரிப்பது ஒரு குடிசத் தொழில்; அதனுகு நல்ல மார்க்கெட் இருக்கிறது; ஆகவே இன்னும் அதை விரிவுபடுத்தமுடியும்.

"தமிழ்நாட்டில் கதர்த் தொழிலில் 1,50 000 பேரும், கிராமக் கைத்தொழில்களில் 2 50,000 பேரும் ஈடுபட்டிருக்கிறார்கள்."

வன்முறைச் செயல்களுக்கு சிண்டிகேடர்கள் தூண்டுதல்

எதிரிகளின் சூழ்ச்சியை முறியடிப்பீர்

கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாடு காத்திட முனைவீர்

சென்னை, அக். 12—

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் கழகத்திலிருந்து 'சஸ்பெண்டு' செய்யப்பட்டதையடுத்து--சுந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு -- சிண்டிகேட் கட்சியைச் சேர்ந்த குண்டர்கள் ஆங்காங்கு காலித்தனத்திலும், வன்செயல்களிலும் ஈடுபடுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கழகத் தோழர்கள்' என்ற பெயரிலும், 'எம் ஜி. ஆர். ரசிகர்கள்' என்ற பேர்வையிலும் கழக விரோத நடவடிக்கைகளிலும், கழகத் தலைவர்களை மாசுபடுத்தும வகையிலும் அந்தக் காலிகள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருகிருர்களாம்!

இந்தக் காலிக் கூட்டம் பின்னணியில் இருந்துகொண்டு, பள்ளி மாணவர்களையெல்லாம் கழகத்துக்கும்-கழகத் தலைவர்களுக்கும் எதிரான முழக்கங்களை எழுப்பச் செய்தும், சுவர்கள்--வண்டிகளில் தாறுமாருக எழுதச் செய்தும் வருவதாகத் தெரிகிறது.

கழகத்தின் மீது உண்மையான பற்றும், கழக இலட்சியங்களில் உள்ளபூர்வமான பிடிப்பும் உள்ள எவரும் இத்தகைய இழிசெயல்களில் இறங்கமாட்டார்கள்; அப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுபவர்களை அண்ணுவின் தம்பிமார்களாகக் கொள்வதற்கில்லை!

கழகத்தைக் களங்கப்படுத்திக் குழப்பம் விளைவிக்கக் காத்திருக்கும் எதிர்க் கட்சியினரின் திருவிளையாடல்களதாம் கடந்த இரண்டு நாட்களாகச் சில இடங்களில் நடந்துவரும் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள்!

எனவே கழகத் தோழர்களும்--ஆதரவாளர்களும் எதிரிகளின் சூழ்ச்சியை முறியடிக்கும் வகையில், கடமை--கண்ணியம்--கட்டுப்பாடு காத்து அமைதியும் பொறுமையும் கடைபிடிக்க வேண்டுகிறோம்.

உற்பத்தித் திறனுக்கு ஏற்ப ஊதிய விகிதம்

குடியரசுத் தலைவர் கிரி யோசனை

அடுத்த கால் நூற்றுண்டில் ஆற்ற வேண்டிய பணி குறித்து வலியுறுத்தல்

புதுடில்லி, அக். 12—

"எல்லாச் செயல் துறைகளிலும் உற்பத்தித் திறன் அதிகரிப்பதற்கும் எல்லோருக்கும் வேலைவாய்ப்பு நிலையை எய்துவதற்கும் அடுத்த 25 ஆண்டுகளேப் பயன்படுத்த வேண்டும்.

"மறைமை, உற்பத்தித் திறன் அதிகரிப்பினுல்தான் ஒழிக்க முடியும்; நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் நிறைவாழ்க்கை அனுபவிக்கக்கூடிய சமூகத்தை அமைக்க நிர்வாக -- தொழிலாளர் துறைகளும், தேசிய உற்பத்தித் திறன் குழுவும் பாடுபட வேண்டும்"

என்று, குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் கேட்டுக்கொண்டார்; 'ஒட்டுநிகொள்ளப்பட்ட குறைந்தபட்ச அளவுகளு மேற்பட்ட போனசை உற்பத்தித் திறனுடன் இணைப்பதன் மூலம், தொழில்துறை உலவு சீரமைப்பு' என்ற கருத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

தொழிலாளர் கோரிக்கைக்கு ஈடு தரும் பிரச்சினை

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் காரணமாக தொழிலாளிகளிடையில் அதிருப்தி காணப்படுவதைக் குறிப்பிட்டு அவர் கூறியதாவது :—

"உற்பத்தியை அதிகரிக்காமல் ஊதியங்களை அதிகரிக்க வேண்டுமென்று கோருவதில் பயனில்லை.

"உற்பத்தித் திறனும் -- உற்பத்தியும் அதற்கேற்ற விகிதாசாரத்தில் அமைய அதற்கு அதிகமான விகிதத்தில் ஊதிய அமைப்பை இணக்கமாக அமையவிடில், தொழிலாளிகளின் கோரிக்கைக்கு தொழில்முறை ஈடு கொடுக்க முடியாது.

ஊதிய அதிகரிப்பின் பலன் விலை அதிகரிப்புகள் விழுங்கி விடுவதால், மிகவும் உயர்வேதத்தில் உற்பத்தித் திறனையும் நிலைநிறுத்த வேண்டுவது தொழிலாளர்களின் அடிப்படைப் பொறுப்பாகும்."

பாட மொழிப் பிரச்சினை

அசாம் அரசு தரும் விளக்கம்

பாட மொழி சம்பந்தமாக அசாம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றி அசாம் அரசு விளக்கம் தெரிவித்தது.

மொழிப் பிரச்சினைக்கு அந்தத் தீர்மானம் ஓர் அணுகு முறைதான் என்றும், அதை மீறி நடடிக்கைகள் தொடங்கப்படுகின்றபோது இப்போது தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள் பரிசீலன செய்யப்படும் என்றும் அசாம் அரசின் பத்திரிகைக் குறிப்பு கூறியது.

"தலைமை நீதிமன்றத்தில் இந்தப் பிரச்சினை உள்ளது; அந்த முடிவையொட்டியே இந்தப் பிரச்சினையில் இறுதி அணுகுமுறை நிர்ணயமாகும்" என்று அது கூறியது.

"இந்த நிலையில், மாநிலத்தின் அமைதிக்குப் பெரும் ஊறு விளைக்கும் விதத்தில் வளர்ச்சியைத் தொடர்ந்து நடத்துவது நியாயமா என்பது நீதிர பரிசீலனைகு உரியதாகும்" என்று அது கூறியது.

தொழில் நுணுக்கம் பயின்றவர்கள்

சிறு தொழில் நடத்தக் கடனுதவி தரப்படும்

தமிழக அரசு திட்டம்

சென்னை, அக். 12—

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கத் தமிழக அரசு புதிய திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கிறது; இதன்படி, தொழில் பயிற்சி பெற்றவர்கள் அரசிடம் கடன் வாங்கிச் சொந்தமாகத் தொழில் தொடங்கலாம்.

தொடங்கும் தொழிலின் தன்மைக்கு ஏற்றவாறு ரூ 5,000—ரூ. 2,000—ரூ 1,000 வீதம் கடன் வழங்கப்படும்.

தொழில் தொடங்க வாங்கும் கடனுக்கு வட்டி கிடையாது; சுலபத் தவணை விரிசமுமும் ஒவ்வொரு மாதமும் கடனை திருப்பிச் செலுத்த வேண்டும்.

அரசாங்கத் தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையத்தில் பயன்று தேறியவர்களுக்கே இந்தச் சலுகை வழங்கப்படும்.

கதர்--கிராமத் தொழில்களால் வறுமையை ஓட்ட முடியாது

உருக்கு -- உரம் போன்ற அடிப்படைத் தொழில்கள் பெருகவேண்டும்

தலைமையமைச்சர் இந்திரா காந்தி கருத்து -- அரசுக்கு ஒத்துழைப்புத்தர வேண்டுகோள்

இராஜ்கோட், அக். 12—

நாட்டில் குறிப்பாகக் கிராமப்புறங்களிலும் -- மிகவும் பிற்பட்ட பகுதிகளிலும் நிலவும் வறுமை, வேலையின்மை ஒழிப்புக்காக அரசு மேற்கொண்டு முயற்சிகளில் மக்கள் முழுமையாக ஈடுபட வேண்டும்; இந்த நோக்கம் ஈடேற அரசு ஒவ்வொரு சாதனத்தையும் பயன்படுத்திக்கொள்ள உறுதி கொண்டிருக்கிறது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெரிவித்தார்; அவரேலும் கூறியிருப்பதாவது :—

"கதர் உட்பட்ட கிராமக் கைத்தொழிகள் மூலம் வறுமையையும், வேலையின்மையையும் போக்கிவிட முடியும் என்றால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்; ஆனுல், உருக்கு--உரம் போன்ற அடிப்படைத் தொழில்கள் வேண்டியிருக்கின்றன; இவற்றினுல் தண்ணீர் -- காற்று போன்றவை அசுத்தமாகும்; நீர்வளங்கள் ஏற்படுகின்றன; சேரிகளும் முளைத்துவிடுகின்றன; ஆகவேதான், கிராமப்புற மக்கள் திட்டங்கள் கொண்டுவருவதுடன், அரசு அளிக்கும் சலுகைகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மலவேறு சங்கடங்களால் அரசினுல் நடைமுறையில் செயல்படுத்த முடியாமல் இருக்கிறது; நெருக்கடி காலங்களில் மக்கள் ஒன்றுபட்டு இருப்பது போல் தற்போதைய சங்கடங்களையும் ஒன்றுபட்டுத் தீர்மான எதிர்கொள்ள வேண்டும்.

அரசு அளித்துவரும் கல்வி வசதியை மக்கள் அதிகபட்சமாக பயன்படுத்திக் கொள்ளட்டும், அரசியல் சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை தாங்களே உணர்ந்துகொண்டு விடுவார்கள்; இதற்காகக் கிளர்ச்சிகள் வேண்டியதில்லை."

குசராத்திலும் மின்சார வெட்டு

ஆமதாபாத், அக். 12—

குசராத் மாநிலத்தில் மின்சார வெட்டு செய்யப்படுகிறது.

தொழில்களுக்குப் பயன்படுத்தப்படும் உயர் அழுத்த மின்சாரத்திற்கான சப்ளையில் 15 சதவிகிதம் வெட்டு செயலபடுத்தப்படும்.

குறைந்த அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்களுக்கும்-- விவசாயிகளுக்கும் நாள்தோறும் 4 மணி நேரம் சப்ளை நிறுத்தப்படும்; விடுமுறை நாட்களிலும் மின்சார சப்ளை இவ்வாறு நிறுத்தப்படும்.

வெறுந்தாள் அல்ல-உரிமைசாசனம்

முப்பது ஆண்டுகளாகத் தவித்த மக்களுக்கு முன்னேற்றக் கழக அரசு வழங்கும் பதிவேடு

பரமக்குடி குளங்கோர்வை நிலப் பட்டா வழங்கு விழாவில் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

வெறும் தாளையும் வழங்க வக்கில்லாதவர்களுக்குச் சூடு

பரமக்குடி, அக். 12—

"மனுநீதித் திட்டத்தைத் தமிழக அரசின் சார்பில் இரண்டு—மூன்று ஆண்டுகட்கு முன்பு நாம் தொடங்கினோம்; நேரிலே சென்று கிராமங்களில் மனுக்களை மக்களிடத்தில் பெற்று -- அந்த மனுக்களில் என்னென்ன தேவையென்று மக்கள் சொல்லியிருக்கிறார்களோ அவற்றிற்கு உடனடியாக நீதி வழங்க வேண்டுமென்பதற்காகத் திட்டமிடப்பட்டு -- அந்த நாளை 'மனுநீதி நாள்' என்று அழைத்து -- இன்றைக்கு இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

மனுக்களை அளிக்கத் தாலுகா அலுவலகங்களுக்கோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகங்களுக்கோ சென்று அங்குள்ள இடைத் தரகர்களின் துன்பங்களுக்கோ, இன்னல்களுக்கோ ஏழைகள் ஆளாகி அல்லலுறுவதைத் தவிர்க்கக் கூடுமானவரையில், 'தாங்கள் அதிகாரிகளை நாடிப் போகாமல் அதிகாரிகள் தங்களை நாடி வருகிறார்கள்' என்கின்ற நிலையை மனுநீதித் திட்டத்தின் மூலம் அரசு மக்களிடையே உருவாக்கியிருக்கிறது!

மக்களுக்குச் சேவை செய்வதற்காக அவர்களுடைய வாக்குகளைப் பெற்று யார் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அவர்கள் -- மக்களுக்காக உழைத்துக்கொண்டே இருந்தால்தான் மக்கள் மத்தியிலே மிதித்திருக்க முடியும்!

"ஏழை எளிய மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற உருவாக்கப்பட்டது இந்த அரசு! எந்த ஏழை எளிய மக்களின் நல்வாழ்வை மையமாக வைத்துத் தீட்டப்படும் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றனவா என்று மக்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இங்கு நடைபெற்ற குளங்கோர்வை நிலத்பட்டா வழங்கு விழாவில் சேர்வையில் கூறினார்; மேலும் அவர் ஆற்றிய உரை வருமாறு :—

"இன்று 55,000 பேருக்குப் பட்டாக்களை வழங்குகின்ற வகையில் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; அமைச்சர் நாதவன் அவர்கள் எதிர்க்கட்சியிலே இருந்த அந்தக் காலத்திலேயே இந்தக்கள் தீர்மானம் ஒன்றினைச் சட்டமன்றத்திலே கொண்டு வந்தார்; அது தாங்கியெறியப்பட்டது.

வெறும் தாளைத்தானே கொடுக்கிறார்கள்? இந்தத் தாளை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்?' என்று யாரோ பேசியதாக—கேட்டதாக—மத்திரிகைகள் அதனை வெளிப்படுத்தியிருப்பதாக ப. உ. சண்முகம் இங்கே எடுத்துச் சொன்னார்.

காள் கேட்கிறேன் -- இந்தத் தாளைக்கூட அவர்களுடைய கொம்பு-திராணி-போக்கியதை அவர்களுடைய ஆட்சியிலேறிப் படவில்லையே -- ஏன்?

ஏன் அந்தத் தாளைக்கூடக் கொடுக்க மறுத்தார்கள்'—அன்று?

இன்று முன்னேற்றக் கழக அரசு வழங்குகின்ற இந்தத் தாள் -- சாதாரணத் தாள் அல்ல; இந்தத் தாளில் அந்த உழவனுக்குரிய உரிமைச் சாசனம் எழுதப்பட்டிருக்கிறது; அவனை அங்கிருந்து யாரும் அந்நிமிட முடியாது.

நேற்று வரையில் இருந்த நிலைமை அவனை அங்கிருந்து அந்நாளாம் 'வெளியே போ' என்று சொல்லலாம்.

இந்தத் தாள் அவனுடைய கைக்குப் போன பிறகு, அவனாயும் அதைக்க முடியாது; 'போ' என்று சொல்ல முடியாது; சொன்னால், 'வா -- நீதிமன்றத்துக்கு' என்று அழைக்கக்கூடிய உரிமையைத்தான் இந்தத் தாள் பெற்றிருக்கிறது!

இதுகூடப் புரியாமல் சில பேர் பேசுகிறார்களே -- இவர்கள் எல்லாம் முதலமைச்சர்களாக இருந்திருக்கிறார்களே--'எங்கேயல்லாம் எண்ணும்போது, 'முதலமைச்சர்களாக இருந்தவர்கள் இம்மடிப்பேசுகிறார்களே' என்று அல்ல - 'இவர்களும்முதலமைச்சர்களாக இருந்திருக்கிறார்களே' என்று தான எனக்கு ஆச்சரியம் ஏற்படுகிறது.

இன்று 55,000 பேருக்குக் குளங்கோர்வைக்கான உரிமைச் சாசனத்தை அளித்திருக்கிறோம் என்றால், முப்பது ஆண்டுக்காலமாக இந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் அதைக் கேட்டுத் தவித்திருப்பார்கள் என்று தான் பொருள்!

முத்து அவர்கள், மதுரையிலே ஒரு நிலச்சீர்மை எடுத்துச் சொன்னார் -- அன்றாடம் கிராமப் புறத்து விவசாயப் பெருங்குடிமகன் சங்கடப்பட்ட நிலச்சீர்மை!

பட்டா இல்லாத ஒருவனை, 'உனக்குப் பட்டாதான வேண்டும்' என்று கேட்டு, கிராமப்புறத்திலே இருக்கின்ற அவனை வதைப் புறத்துக்கு அழைத்து வருவான்; கதறத்தியேயே நல்ல சிற்றுண்டி விடுதியாகக் மாற்றுவர் சாப்பிடுவான்; அவன் சாப்பிட்ட 'பில்' துக்கான தொகையை யார் கொடுப்பார்கள் என்று உங்களுக்கே தெரியும்; 'ஸட்டா'வுக்காகக் பரிதவித்துக் கொண்டிருக்கின்றானே -- அவன் தானே கொடுத்திருப்பான்?

கிராமப்புறத்திலிருந்து அழைத்துச் செல்லப்படுபவன், அலுவலகத்தின் வாயிற்புறத்திலே நிற்பான்; அவனை அழைத்து வந்தவன் திரும்பி வந்து சொன்னான்--'அதிகாரி இன்றைக்கு வரவில்லை இல்லை; சிறிய அதிகாரி தான் இருக்கிறார்; நாளைக்கு வரச் சொல்கிறார்' என்று; அந்த ஏழை விவசாயியும் அதை நம்பிக் கொள்வான்.

'நாளைக்கு வரச் சொன்னார்கள்' என்று அந்தத் தரகன் ஏன் சொல்கிறான் என்றால், நாளைக்கு மறுபடியும் அதே சிற்றுண்டி விடுதிக்குப் போகலாம் அல்லவா -- இது தரகனுடைய திட்டம்.

இம்மடிப் பல தரகர்கள் கிராமத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்கும் -- அதிகாரிகளுக்கும் இடையிலே இருந்து பணம் சம்பாதிப்பார்கள்; அவர்கள்தான் விவசாயினை ஆட்டிப் படைத்தார்கள்.

இன்றைக்கு அந்த நிலைமைக்கெல்லாம் மாற்றப்பட்டு, நேரடியாக அதிகாரிகளைச் சந்திக்கின்ற வாய்ப்பு -- அதிகாரிகளே தேடிவந்து விவசாயப் பெருங்குடி மக்களைச் சந்தித்து -- அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்கின்ற வகையும் இந்த அரசிலே உருவாக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பேடுகள்--பிரச்சினைகள் தீர வழிகோலக்கூடும்

குளங்கோர்வையிலே மட்டுமல்லாமல் வருவாய்த்துறை அமைச்சரின் பெருமுயற்சியினால்-- அவர் காட்டிய அமைதி ஊக்கத்தினாலும்; அவருக்குத் துணையாக வருவாய்த்துறை அதிகாரிகள்-- அலுவலர்கள் -- மாவட்ட ஆட்சித் தலைவர்கள் -- ஆங்காங்கிருக்கின்ற மாவட்ட அதிகாரிகள் ஆகியோர் தங்க ஒத்துழைப்பின் காரணத்தினால், இன்று பல உரிமைக் குறிப்பேடு என்கின்ற ஒரு புத்தகம் தயாரிக்கப்பட்டு, ஒரு விவசாயி செலுத்த வேண்டிய நிலவரி -- தனக்கிருக்கின்ற நிலத்தின் அளவு -- அவருக்கும் அரசுக்கும் உள்ள தொடர்புகள் எல்லாம் அந்தக் குறிப்பேட்டுப் புத்தகத்திலே தெளிவாகப் பார்த்து எழுதிக்கொண்டும் அளவில் தரப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கு அந்தக் குறிப்பேடு விசாயிக்கு ஒரு புத்தகமாகத் தெரியலாம்; அந்தப் புத்தகத்தில் அவனுடைய நிலத்தைப் பற்றிய ஒரு வரலாறு குறிக்கப் பெற்றிருக்கும்; அந்த நிலத்தைப் பற்றிய வரலாற்றும் புத்தகமாக அது இருக்கும்.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ நில உடைமையாளர்கள் 74 இலட்சம் பேர் இருக்கிறார்கள்; 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கும் இதில் இருக்கலாம் -- இரண்டு ஏக்கர் நிலம் படைத்திருக்கும் இருக்கலாம். எல்லாரும் சேர்ந்து 74 இலட்சம் பேர் இருக்கலாம்.

இந்த 74 இலட்சம் பேரும் தங்கள் நிலத்தைப் பற்றிய குறிப்புகளை எழுதி வைத்துக்கொள்ள செய்கின்ற வகையும் இந்த அரசிலே உருவாக்கப்பட்டிருக்கிறது.

முதுமலையில் மிருகங்களைக் காண்பதற்கு வசதி

அமைச்சர் க. இராசாராம் தரும் தகவல்கள்

சென்னை அக். 11—

"முதுமலைக் காடுகளில் வெளிநாட்டுப் பயணிகள் காட்டு மிருகங்களைக் காண்பதற்கு மரத்தின் உச்சிகளில் மரவீடுகள் (குடிசைகள்) அமைக்கப்படும்"

என்று சுற்றுலாத் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் தெரிவித்தார்.

சென்னை கிண்டியிலுள்ள சிறுவர் பூங்காவில் வனவிலங்குகள் வார விழாவையொட்டி நடைபெற்ற சிறப்பு விழாவில் சேர்வையில் அவர் மேலும் கூறியதாவது :—

"வனவிலங்குகளை வளர்ச்சியுறச் செய்து -- சுற்றுலாத் துறை மூலம் அங்கிருக்கின்ற சேவையணியை அதிகரிக்கச் செய்ய இயலும்.

வனவிலங்குகள் வாழும் காடுகளை விளம்பரப்படுத்துவதன் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் அவற்றைக் கண்டு மகிழும் வாய்ப்பினை ஏற்படுத்த முடியும்.

தமிழ்நாட்டில் நீலகிரி மலையிலுள்ள முதுமலைக் காடுகளைச் சிறந்த வனவிலங்குகளின் புகலிடமாக மாற்றும் காலம் வெகு தூரத்தில் இல்லை; ஆயிரக்கணக்கான மக்கள் அங்குவந்து தங்கியிருந்து வனவிலங்குகள் துள்ளி விளையாடும் காட்சிகளைக் கண்டு மகிழ்கின்றனர்.

இயற்கை வளம் கொழிக்கும் அந்தக் காடுகளில், மரத்தின் உச்சிகளில் மரவீடுகள் அமைத்து -- வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்கியிருந்து மிருகங்களைக் காண்பதற்கு வசதி செய்யப்படும்.

இதுபோன்ற வனவிலங்குகள் புகலிடம் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை; இங்கு வனவிலங்குகளைப் பாதுகாக்கப்படும் -- வேட்டையாடுதல் தடுக்கப்படும்.--

விழாவுக்கு அமைச்சர் ஒ. பி. இராமன் தலைமை தாங்கினார்.

திரு. கே. ஏ. மோஜா அனைவரையும் வரவேற்றார்.

திரு. பி. ஆர். முகம்மது கலீர் நன்றி கூறினார்.

புரட்சிகர மாறுதலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தம்பித்துக்கொள்ள வேறு யார் யார் நேரிலாவது நிலம் வைத்திருக்கக் கூடியவர்களும் உண்டு.

அதுபோல காட்டிலே நிலையக் செய்யப்பட்டிருக்கின்றதா என்று அவைகளையெல்லாம், கண்டுபிடிக்கக்கூடிய அளவில்-- கழக அரசின் உறுதியோடு நாட்டின் நலவாழ்ப் பக்கங்களினால் இன்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அந்த வகையிலே இந்தக் குறிப்பேட்டுப் புத்தகம், 'நம்முடைய சீர்திருத்தக் கொள்கைக்கு -- சோசலிசக் கொள்கைக்கு உதவுகின்ற வகையிலே இது ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தும்.

இவ்வாறு சிறப்புக்கள் அடங்கிய அந்தக் குறிப்பேட்டுப் புத்தகத்தை வெளியிடுகின்ற இந்த விழாவிலும், குளங்கோர்வைக் கட்டடங்களை வழங்குகின்ற விழாவிலேயும் நான் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்வேன் -- இந்த அரசு உங்களுக்காகப் பாடுபடுகிற அரசு -- அந்தத் தேவையை நிறைவேற்றுகின்ற அரசு' என்று!

அதற்காக ஊழியம் புரிகின்ற வேலைக்காரர்கள்தான் அதிகாரிகள் அமைச்சர் பெருமக்கள்!

'நாங்கள் கித்தாப்புக்கு உரியவர்கள் -- நீர்த்திரி கேவர்கள்' என்று எண்ணிக்கொண்டு உங்களைக் காண வந்திருப்பவர்கள் அல்லர்! காங்கள் வெகுசாதாரணமான தொண்டர்கள்! நீங்கள் காலால் இடுகின்ற கட்டளையை நாங்கள் தலையால் செய்து முடிக்கின்ற ஊழியர்கள்!

இதுபோல் என்றென்றும் உங்களுக்குத் தேவையான சேவைகளைச் செய்ய இந்த அரசு என்றென்றும் சீயராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

பரமக்குடியில் முதல்வர் கலைஞர்

55,000 பேருக்கு நிலப் பட்டாக்கள்--நிலவுடைமைக் குறிப்பேடுகள் வழங்கினார்

அமைச்சர் ப. உ. சண்முகம் தலைமையில் விழா--சத்தியவாணிமுத்து, செ. மாதவன் பங்கேற்பு

பரமக்குடி, அக். 11—

ஐம்பத்தைந்தாயிரம் பேர்களுக்குக் குளங்கோர்வை நிலப் பட்டா -- நிலவுடைமைக் குறிப்பேடு இவையெல்லாம் பரமக்குடியில் முதலமைச்சர் கலைஞர் எழுங்கினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் சுந்திரகுமார் வரவேற்புப் பேசினார்.

அமைச்சர் ப. உ. சண்முகம்

விழாவிற்குத் தலைமையேற்று வருவாய்த்துறை அமைச்சர் ப. உ. சண்முகம் பேசியதாவது :—

"நிலச் சீர்திருத்தத் திட்டத்திலிருக்கின்ற நல்லோது கட்டங்களில் இதுவும் ஒன்று; உழுபவன் உழுது கொண்டே இருக்க வேண்டும் என்ற நிலை இனி விரைவிலேயே நீங்கி விடும்.

ஏழை உழவன் உழுது நாடு நடுவே நிலம் அலுவல் அனுபவிக்கத்தக்கதாக வேண்டும்; அந்த முறையிற்தான் இந்தப் புரட்சிகரமான திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

நிலப் பிரபுக்களில் யாரானாலுஞ் சரி -- அதன் குத்தகைகளை கொத்தகம் பெறவும், அதிகாரிகள் மூலம் அந்தக் குத்தகைகளை கொத்தமாகப் பெற்றுக் கொள்ளவும் முயற்சிக்கக் கூடாது.

நில உரிமையாளர்களுக்கே இந்தக் குத்தகைகளைத் தர வேண்டும்; இல்லையேல் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இங்கே வழங்கப்படும் நிலவுடைமைக் குறிப்பேடுகளை, உழவர்களைத் தேடிச் சென்று நிலப் பிரபுக்கள் யாராவது கைப்பற்ற முயன்றால், சட்டப்படி உழவர்களுக்கு அரசு மாதுகாப்புத் தரும்."

அமைச்சர் சத்தியவாணிமுத்து

அரிசன நலத்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து சேர்வையில் குறிப்பிட்டதாவது :—

"உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று பலரால் சேர்யப்பட்டாலும், முதல்வர் கலைஞர் ஆட்சியில்தான் செயல்படுத்தப்படுகிறது

உழவர் பெருமக்களுக்கு உறுதுணை புரியும் அரசு இது; 'வாற்றுள்ளபோதே தூற்றிக் கொள்' என்பதுபோல, கலைஞர் அரசு உள்ளபோதே உழவர் பெருமக்கள் வளர வாழ்வைத் தேடிக் கொள்ள வேண்டும்."

அமைச்சர் செ. மாதவன்

சட்ட அமைச்சர் செ. மாதவன் சேர்யதாவது :—

"கிராமங்களுக்கு மக்கள் பிரச்சினைகள் எல்லாம் கலைஞருடைய ஆட்சியில்தான் தீர்க்கப்படுகிறார்கள்; நாடு நலம் பெற வேண்டுமானால் -- தொழில் வளம் ஓங்க வேண்டுமானால், கலைஞர் கரத்தை என்றென்றும் நாம் வலுப்படுத்த வேண்டும்."

முதுமலையில் மிருகங்களைக் காண்பதற்கு வசதி

மாபெரும் சவால்

தமிழ்நாடு அரசு திறமையாகச் சமாளிக்கிறது

ஏழைகட்கு உதவும் திட்டம்--மத்திய அமைச்சர் பாராட்டு

சென்னை, அக். 11—

"தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் செய்துவரும் நல்ல பணியினைப் பாராட்டுகிறேன்.

"குடிசைகளை ஒழிக்கும் ஒரு மகத்தான சவாலைத் தமிழ்நாடு அரசு நிறைவாகச் சமாளித்து வருகிறது.

"ஏழைக் குடிசை வாழ் மக்களுக்கு வசதி நிறைந்த வீடுகளைக் கொடுப்பது பாராட்டுக்கு உரியது.

"இத்தகைய ஒரு சிறப்பான திட்டத்தைத் தமிழ்நாடு தவிர வேறு எந்த மாநிலமும் நிறைவேற்றவில்லை என்பதைக் குறிப்பிடுகிறேன் காரக விழாக் புகழேன்"

என்று மத்திய அரசின் நகர்த்துறை அமைச்சர் ரோசரியியர் டி. பி. சட்டோபாத்தியாயர் செய்தியாளர்களிடம் சேர்வையில், தமிழ்நாடு குடிசை குடிசை மாற்றுத் திட்டங்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்கையில் புகழ்ந்துரைத்தார்.

மத்திய அரசின் மந்தப் போக்கு--நான்கு மாநிலங்கள் குற்றச்சாட்டு

விரிந்த அளவுள்ள நடைமுறைவழக்கங்களின் விளைவு--தொழில் வளர்ச்சிக் கழகங்களின் திட்டங்கள் பாழ்

புதுதில்லி, அக். 12 —

மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகங்களின் திட்டங்கள் நாமதமடைவது பற்றி மத்திய அரசாங்கத்தின்மீது நான்கு மாநிலங்கள் குறை கூறியிருக்கின்றன! 'இந்தத் தாமதம், மத்திய அரசின் மீது வரும் விசித்த அளவில் உள்ள நடைமுறை வழக்கங்களால் ஏற்பட்டிருக்கிறது' என்று அந்த மாநிலங்கள் கூறியிருக்கின்றன!

கோரம் -- அரியானா -- பஞ்சாப் -- ஆந்திரம் ஆகிய மாநிலங்கள்தான் இதுபோன்ற குற்றஞ்சாட்டியுள்ளன!

"மற்ற இடையூறுகள் ஒதுபுறமிருக்க, இறக்குமதி லைசென்சு அளிப்பதற்கும் -- மூலதனப் பிரச்சினைகளில் அனுமதி வழங்குவதற்கும் ஏற்படும் காலவிரயமே இந்தத் தாமதத்திற்குக் காரணம்" என்று அம்மாநிலங்கள் கூறியிருக்கின்றன!

செயல்பூர்வ அனுமதி கிடைப்பதில் தாமதம்

"நடைமுறை மரபுகளை மேற்கொள்ளும்போது, திட்டத்தையே எடுத்துக்கொள்ள முடியாதோ என்ற அளவிற்கு நிலைமை ஏற்படுகிறது; இதனால் செயல்முறையாக அனுமதிக் கடிதம் அளியாது மிகவும் மெதுவாக நடைபெறுகிறது"

என்று கேரளத் தொழில் அமைச்சர் எம். வி. தாமஸ் கூறியுள்ளார்; இதுவிற்கு அடி ஒரு மேற்கோள் காட்டுவையில் குறிப்பிட்டதாவது :—

"நைலான் தொழிற்சாலை ஒன்று நிறுவ அத்தொழிற்சாலை, கூட்டுவகித் துறையில் இருக்க வேண்டுமென்று நிகர்த்தனியுடன் மத்திய அரசு அனுமதிக் கடிதம் வழங்கியது; அதுதான், அதில் கூட்டுச் சேரும் தனியார், மத்திய அரசின் அனுமதி பெற்றவராக இருக்க வேண்டும்; 'இந்த நைலான் தொழிற்சாலைக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் கத்திய அரசு நிறுவ எண்ணியுள்ள தொழிற்சாலையிலிருந்து பெறப்பட வேண்டும்' என்றும் மத்திய அரசு நிர்ணயம் விதித்தது.

"இம்மரபுகளையெல்லாம் மாநில அரசு (கேரளம்) மேற்கொண்டு முடித்தபோது, மத்திய அரசு 'கூடு' தொழிற்சாலை நிறுவிக் தன் திட்டத்தைக் கைவிட்டது,"

ஒப்புதல் கிடைக்க ஓராண்டுக்காலம்?

பஞ்சாப் அரசைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறியதாவது :—

"வெளியார் கூட்டு வெளிநாடு களிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய மூலப் பொருள்கள் ஆகியன சம்பந்தமாக மத்திய அரசு ஒப்புதல் அளிப்பதற்கு காட்டுகின்ற தாமதம் திட்டத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியை நிறைவேற்றி முடிப்பதிலும் தாமதத்தை உண்டாக்குகின்றது.

"சாதாரணமாக ஒப்புதல் வழங்குவதற்குக் கிட்டத்தட்ட ஓராண்டுக் காலம் பிடிக்கின்றது; அத்துடன் நீண்ட கால நிதியுதவி அளிக்கும் பிரச்சினையில் மத்திய நிதி நிறுவனங்களும் தாமதம் செய்துவிடுகின்றன."

சிக்கலான நடைமுறை

அரியானா அரசின் அதிகாரி ஒருவர் கூறியதாவது :—

"மரபுகளின் சிக்கலான நடைமுறைகள், தியங்களுக்கு இறுதி வடிவம் கொடுப்பதில் தாமதத்தை உண்டாக்குகின்றன."

பிரச்சினையில் காட்டப்படும் பாகுபாடுகள்

மைசூர் தொழில் அமைச்சர் கூறியதாவது :—

"தனியார் மூலதனம் அனுமதி வழங்கப் பட்ட திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதத்தை உண்டாக்குகின்றன."

காலம் அதிகமாகக் காரணம் என்ன?

தமிழ்நாடு தொழில் வளர்ச்சித் துறை காரப்பரேஷன் அதிகாரி ஒருவர் கூறியதாவது :—

"மாநிலத் தொழில் திட்டங்கள் தொடர்பான ஆய்வுத் வேலைகள் முடிவடைந்த பின்னர், தொழில் நுட்ப உதவி -- மூலப் பொருள் -- வெளிநாட்டுச் செலாவணி ஆகியவைகளைப் பெறுவதற்குக் காலம் அதிகமாகிறது."

மாநிலத் திட்டங்கள் சம்பந்தமாகப் பிரச்சனையானது மாநில வாரியான செலவுமுறை அறுமுறைக் கடிதங்கள் அளிக்கப்பட்டுள்ளன :—

ஆந்திரம் :—செயல்முறை அனுமதிக் கடிதம் அளிக்கப்பட்டுள்ள திட்டங்கள் 8; இவை மட்டுமே உற்றத்திக் கட்டங்கள் உள்ளன.

குசராத்:—அனுமதி வழங்கப்பட்ட திட்டங்கள் 8; எல்லாம் முன்னேறும் கட்டத்தில் உள்ளன.

அரியானா:—அனுமதி வழங்கப்பட்ட திட்டங்கள் 11; இவற்றில் ஒன்றுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

கேரளம்:—அனுமதி வழங்கப்பட்ட திட்டங்கள் 22; இவற்றில்ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மைசூர்:—அனுமதி வழங்கப்பட்டவை 7; மூன்று திட்டங்கள் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரிசா :—அனுமதி வழங்கப்பட்டவை 10; எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை.

பஞ்சாப் :—அனுமதி வழங்கப்பட்டவை 17; மூன்றுக்கு தொழில் லைசென்ஸ் தரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு :—அனுமதி வழங்கப்பட்டவை 17; எட்டுத் திட்டங்களில் குறிப்பிட்ட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது; மற்றவை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்ணாவே முத்தமிழ் ஆவார்

அவர் பிறந்ததால் தமிழுக்கு ஏற்றம் பிறந்தது

நலக்குச் சீரான ஆட்சியும் சிறப்பான வாழ்வும் கிடைத்தது

இராயப்பேட்டை முத்தமிழ் மன்ற விழாவில் பேராசிரியர்

சென்னை, அக். 11—

"தமிழரது வாழ்வும் வளமும் -- தமிழ் மொழியின் வளர்ச்சியும் முன்னேற்றமும் பேரறிஞர் அண்ணா அவர்களின் தொண்டினால்தான் இன்று மிகவும் சிறந்துள்ளது அண்ணா அவர்கள் பிறந்தநாமல் இருந்திருந்தால், தமிழகத்திற்கும் -- தமிழ் மக்களுக்கும் இன்றுள்ள சீரும் சிறப்பும் ஏற்பட்டிருக்க முடியாது"

என்று கல்லூரி நல்வாழ்வுத் துறை அமைச்சர் ரோசரியர் க. அன்பழகன் அவர்கள், இராயப்பேட்டை முத்தமிழ் மன்றத் துவக்க விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

சென்னை—இராயப்பேட்டை பீட்டர்ஸ் சாலை வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் முத்தமிழ் மன்றத் துவக்க விழா வும், அறிஞர் அண்ணா -- அண்ணல் காந்தி பிறந்த நாள் விழாவு 7-10-72-ல் குடியிருப்புப் பகுதியில் நடைபெற்றது.

விழாவிற்கு மன்றத் தலைவர் ஆ. அறிவழகன் தலைமைவகித்தார்.

விழாவிற்கு வந்திருந்தவர்கள் மன்றச் செயலாளர் 'நம் நாடு' துணையாசிரியர் மா.செங்குட்டுவன் வரவேற்புப் பேசினார்.

இறுதியில் முரசொலி திணகரன் நன்றி கூறினர்.

முத்தமிழ் மன்றப் பொறுப்பையை முரசொலி மாறன் எம்.பி. திருந்துவைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

விழாவில் முன்னாள் மேயர் சா. கணேசன், எஸ். எஸ். மாரிசாமி எம்.பி., அபுதுல்சமது எம்.பி., காஜா மொய்தீன் எம்.பி., வீட்டு வசதி வாரியக் செயலாளர் கோ. முத்துப்பிள்ளை ஆகியோர் மன்றத்தை வாழ்த்திப் பேசினர்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் சிறப்புரை வழங்கிய பேசையில் குறிப்பிட்டதாவது :—

"அறிஞர் அண்ணா பிறந்த நாள், தமிழ் மொழி -- தமிழ் மக்கள் -- தமிழ் நாடு ஒரு பொன்னான வாய்ப்பினைப் பெற்ற நாளாமம்.

அண்ணா பிறந்த நாள் முத்தமிழ் முழங்குகின்ற ஓர் நன்னாளாகும்.

கருத்ரளவில் எடுத்துக் கொண்டால் தமிழின் வடிவத்துக்கு எடுத்துக்காட்டாக அண்ணா திகழ்கிறார்

வேறுபாடான கருத்துக்களைக் கொண்டமாற்றுக் கட்சியினர்க்கு கூட, அண்ணாவின் தமிழ்ப் நடையை வாரணட்டியிருக்கிறார்கள்.

இந்தச் சமுதாயத்துக்கு, காந்தியடிகளின் கருத்துக்களை வழி காட்டியாகக் கொண்டு -- அதனைச் செயல்படுத்தியவர் அண்ணா!

காங்கியடிகளின் வழியில் ஒரு நியமான -- நாகரிகமான அரசியலை உருவாக்கியவர் அண்ணா; தமிழ் நாட்டில் சீரான ஆட்சியை ஏற்படுத்தியவர் அறிஞர் அண்ணா!

சீரான ஆட்சியை உருவாக்கி மக்களுக்காக -- தமிழ்ச் சமுதாயத்தின் ஏழை எளிய மக்களுக்காகத் திட்டமிட்டு ஆட்சி நடத்தியவர் பேரறிஞர் அண்ணா!

இன்றைய தமிழகம், நகர வளர்ச்சித் திட்டம் -- கல்வி -- சுகாதாரம் போன்ற மல்லேறு துறைகளிலும் சிறந்து விளங்கும் நிலையில் இருக்கிறது; அத்தகைய நல்வாழ்வுச் சின்னங்களின் அடிப்படைக்குக் காரணம் அண்ணாதான்!

தமிழ் மொழி முள்ளு, தம்மொழி என்று தொடங்கி -- பேச, தமிழ் மொழி என்றியது என்கிறார்கள்.

தமிழ்மொழி இயற்கையாகவே பிறந்த மொழி செம்மல்கிறதும் இயற்கையிட்ட மொழி!

தமிழின் சிறப்புக்களைக் காணும்போது அது ஓர் உணர்ச்சிமொழியாக -- காரண மொழியாக விளங்குகிறது.

காரண அப்படையில் கருத்தைப் புலம்படுத்தும் மொழியாக விளங்குவது தமிழ் மொழி.

இயல் -- இசை -- கூத்து என்ற முத்தமிழைக்கொண்டு ஒன்றோடு ஒன்றாக மூன்று பிரிவுகளும் கலந்து இருக்கும் மொழி தமிழ் மொழி.

உலகில் வேறு எந்த மொழிகளிலும் இத்தகைய பிரிவுகள் இல்லை; அப்படியே இருக்கிறதாலும், அவைஒன்றோடொன்று கலந்ததாக இல்லை

தொடக்கம் -- முடிவுக்கும் -- நிகழ்தல்மை கொண்டது தமிழ் மொழி.

உலகில் வாழாது தொடங்குமானால், அதற்கு அடிப்படைமுத்தமிழாக்தான் இருக்கும் என்னதைத் தவிர வேறில்லை.

பேராசிரியர் சுக்ரா பிள்ளைகூடத் தமது நூலில், 'இந்திய வரலாறு கங்கை சிந்து நதியிலிருந்து தொடங்கியிருக்கிறது; ஆனால் அது குமரிமுனையிலிருந்துதான் தொடங்கியிருக்க வேண்டும்' என்று கூறியிருக்கிறார்.

அதன்படி நாகரிகத்தின் வரலாற்றை ஆராய்ந்தால், அதில் முதலிடம் வகிப்பது தமிழும் -- தென்னாடுமாகும்!

அத்தகைய முத்தமிழை ஆராய்ந்து, உலகத்துக்கு அதன் பெருமையை -- சிறப்பைப் புலம்படுத்த வேண்டும்; அதற்கு இராயப்பேட்டை முத்தமிழ் மன்றங்கள் பாடுபடவேண்டும்; தமிழ் மக்கள் தமிழ்நாட்டிலே வாழவதற்கும் இத்தகைய மன்றங்கள் கணியாற்ற வேண்டும்."

மாபெரும் சவால்

தமிழ்நாடு அரசு திறமையாகச் சமாளிக்கிறது

ஏழைகட்கு உதவும் திட்டம்--மத்திய அமைச்சர் பாராட்டு

மத்திய அரசின் மந்தப் போக்கு--நான்கு மாநிலங்கள் குற்றச்சாட்டு

வங்க தேச அரசியலில் சாதனை

பத்தே மாதத்தில் புதிய அரசியலமைப்புச் சட்டம்

'வங்கள தேசத்தின் புதிய அரசியலமைப்புச் சட்டம் இன்னும் சில நாட்களில் வெளியிடப்படும்"

என்று, வங்கள தேசத் தலைமையமைச்சர் முஜிபுர் ரகுமான் தெரிவித்தார்.

"அந்த அரசியல் அமைப்புச் சட்டம் மக்களாத இறுதிப்படுத்தம் -- அவர்கள் தேவையை நிரப்பும் என்று நம்புகிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

அவாமி லீக் நாடாளுமன்ற உறுப்பினர் கட்டத்தில் நேசையில் மேலும் அவர் கூறியதாவது :—

"வங்கள தேச அரசியல் நிர்ணய மன்றம் இம்மாதம் 12-க் தேதி கூடவிருக்கின்றது; இக்கூட்டத்தில் நகல் அரசியல் அமைப்புச் சட்டம் இறுதியாக்கப்படும்.

வங்கள தேசம் விடுதலைபெற்றுன் வத்து மாதங்களாகின்றன ஆகின்றன; இதுக் குறுகிய காலத்திற்குள் இங்கு அரசியல் அமைப்புச் சட்டம் தயாரிக்கப் பட்டுவிட்டது; உலக வரலாற்றில் இமாதிரி இதுவரை நடந்தது கிடையாது; வங்கள தேசம் இந்த வகையில் ஒரு முன் மாதிரியை உண்டாக்கியுள்ளது; அவாமி லீக் கட்சி இதை சாதித்துள்ளது.

இராணுவ ஆதிக்கத்தை எதிர்த்து வன்முறையற்ற போரையும். அதன் பின் ஆயுதப் போரையும் அவாமி லீக் நடத்தியது.

நாடுவிடுதலை பெற்றதும், உடனே சட்டம் -- ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது; விடுதலை பெற்ற மக்களின் நிரந்தரமான அரசு ஏற்படுத்தப்

கள்ள நோட்டுகள்

ரிசர்வ் பாங்கி தரும் கணக்கு

பம்பாய், அக். 12—1971—72 ல் 1,000 பத்து ரூபாய் நோட்டுகள் கள்ள நோட்டுகளாக இருந்தன.

ரிசர்வ் பாங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், அந்தச் சாலத்தில் 900-க்கு மேற்பட்ட 100 ரூபாய் கள்ள நோட்டுகள் புழக்கத்தில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

391 ஒரு ரூபாய் நோட்டுகள் -- 607 இரண்டு ரூபாய் நோட்டுகள் -- 241 ஐந்து ரூபாய் நோட்டுகள் -- 878 பத்து ரூபாய் நோட்டுகள் -- ஆகமொத்தம் 2 394 கள்ள நோட்டுகளாக இருந்தன.

1971—72-ல் 52 ஒரு ரூபாய் நோட்டுகள் -- 102 இரண்டு ரூபாய் நோட்டுகள் -- 168 ஐந்து ரூபாய் நோட்டுகள் -- 1,120 பத்து ரூபாய் நோட்டுகள் -- 927 நூறு ரூபாய் நோட்டுகள் -- ஆக மொத்தம் 2,369 கள்ள நோட்டுகளாக இருந்தன.

1969—70-ல் ஒரே ஒரு 1,000 ரூபாய் கள்ள நோட்டு காணப்பட்டது.

'மலை'யைக் கல்லி 'எலி' பிடித்தனர்

மத்திய புலன் விசாரணைப் பிரிவின் சாதனை

புதுடெல்லி, அக். 12—

அதிகாரி ஒருவர் தமது மருத்துவச் செலவுக்காக ரூ. 3 அதிக மாகக் பெற்றார் என்ற ஒரு குற்றச்சாட்டை மத்தியக் குற்றப் புலன் விசாரணைப் பிரிவு 15 மாதங்கள் ஆராய்ந்த தகவலைக் குற்றத் திருப்புக் கமிஷனர் வெளியிட்டிருக்கிறார்.

"இப்படிப்பட்ட சிறிய விவகாரங்களிலெல்லாம் ஈடுபட்டுக் காலத்தை வீணாக்கவேண்டாம்" என்று அவர் அதிகாரிகளுக்கு அறிவுரை கூறினார்.

பாகிஸ்தானில் அணுசக்தி திட்டங்கள்

புது. டெல்லி, அக். 12—

"பாகிஸ்தானில் ஆராய்ச்சி நடாதுள்ள அணுசக்தி நிலையம், 1.25 இலட்சம் கிலோவாட் உற்பத்தி சக்தியை எட்டியிட்டது; பாகிஸ்தானின் அமைதிக்கான அணுசக்தித் திட்டத்தில் இது ஒரு பெரும் முன்னேற்ற நிலையாகும்"

என்று பாகிஸ்தான் வானொலி கூறியிருக்கிறது.

வானொலியில் கா. வேழவேந்தன்

அக்டோபர் திங்கள் 14-ஆம் நாள் இரவு 8-30 மணிக்கு சென்னை வானொலியில் 'ஆடம்பரம் ஏன் விருந்தில்?' என்ற தலைப்பில் கா. வேழவேந்தன் பேசுகிறார்.

இரா. வெற்றிகொண்டான் நினைப்பேன்

அக். 14: உச்சிப்புளி; 15: மதுரை 5-வது வட்டம்; 16: அரும்புக்கோட்டை; 17: கடலூர்; 18: செங்குவார்பட்டி; 19: சின்னமனூர்; 20: புதுப்படி; 21: வண்டிமேடுபாளையம் (சேரளம்)

பேச்சாளர் முகவரி

இரா. வெற்றிகொண்டான், கல்லூரி இல்லம், செயங்கொண்டச் சோழபுரம், திருச்சி மாவட்டம்.

பம்பாயில் அண்ணா பிறந்த நாள் விழா நள்ளிரவிலும்

அக். 14, 15 ஆகிய நாட்களில் பம்பாயில் — எல். எல். ஆர்., சர். கணேசன், மா. செங்குட்டுவன் ஆகியோர் கலந்துகொள்ள இருந்த—அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் நள்ளிரவைக்கூட்டுகின்றன; விழா நடைபெறும் தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தியாகிகளின் உழைப்பால் உருவானது கழகக்கோட்டை

அது வலிவிழந்து போக இடமளித்துவிடமாட்டார்கள்

'சர்வாதிகாரம்' கழகத் தலைமையிடத்தில் இல்லை--

செய்தியாளர்களிடம் கழகத் தலைவர் கலைஞர் விளக்கம்

சென்னை, அக். 12—

"இருபத்தைந்தாண்டுக் காலமாக எத்தனை எத்தனையோ தியாகிகளின் உழைப்பால் கட்டப்பட்ட கோட்டை தி. மு. க.; இங்குக் கோட்டையின் காவலர்களாக இருக்கின்ற 15 இலட்சத்துக்கு மேற்பட்ட கழக உறுப்பினர்களும் – 18 ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைக் கழகங்களும் – பல்வேறு தணை அமைப்புகளும் -- கழக ஆட்சியால் நன்மை பெற்றவருகின்ற ஏழை எளிய மக்களும் கழகம் வலிமை இழந்துபோக விடமாட்டார்கள்.

"நாங்கள் சர்வாதிகாரப் போக்குக் கொண்டவர்கள் அல்லர்; கழகத் தலைவரான நானும் -- பொதுச்செயலாளர் நாவலரும் எந்த அளவுக்கு விட்டுக்கொடுத்து நடந்துகொண்டிருக்கிறோம் என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள்.

'1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு 27-ஆம் நாள், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழக அரசில்தான், அமைச்சர்கள் – சட்டமன்ற உறுப்பினர்கள் – அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆசியோருடைய சொத்துக் கணக்குக் காட்டவேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானத்தை நானே முன்மொழிந்து அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது; முன்னுண்டு களாகத் தொடர்ந்து அந்தக் கணக்கு அவையில் வைக்கப்பட்டு வருகிறது"

என்று, கழகத் தலைவரும் முதலமைச்சருமான கலைஞர் அவர்கள், நேற்று நிருபர்களின் கேள்விகட்கும் மதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்; நிருபர்களின் கேள்விகளும் -- கலைஞரின் மதில்களும் வருமாறு:—

கேள்வி:—" இப்போது கழகப் பொருளாளர் யார்?"

பதில்:—" எப்போதும் பொதுச் செயலாளர் மேற்பார்வையில் தான் கழகப் பொருளாளர் செயல்படுவார் என்பது கழகச் சட்ட விதி; அதற்கு ஏற்ப கழகப் பொதுச் செயலாளரே இப்போது கழகப் பொருள்ளாளராகச் செயல்படுவார்."

கேள்வி:—"எம். ஜி. ஆர். மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையைக் கண்டு எல். எல். இராஜேந்திரனும் -- நாஞ்சில் மனோகரனும் அதிர்ச்சை வெளியிட்டிருக்கிறார்களே! -- அந்த அதிர்ச்சியில் இந்த நடவடிக்கை கண்டு அதிர்ச்சி அடைந்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறதே -- தாங்கும் ஒரு செயற்குழு உறுப்பினர் என்றும் தன்னை யாரும் இதுபற்றி எவரு ஆலோசிக்கவில்லை என்றும், செயற்குழு கூடுவதற்கு 2 நாட்களே இருக்கும்போது இப்படி ஒரு அவசரமான முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது என்றும் மனோகரன் கூறியிருக்கிறாரே -- இதுபற்றி உங்கள் கருத்து என்ன?"

கலைஞர்:—" செயற்குழு உறுப்பினர்கள் 31 பேரில் 25-க்கு மேற்பட்டவர்கள் ஒரு மாபெரு கழகத் தலைவருக்கும் -- பொதுச் செயலாளருக்கும் அளித்து நடவடிக்கை எடுக்கும்படி கூறியுக்கிறார்கள்; அதே பிரச்சினையை மீண்டும் செயற்குழுவில் வைத்து -- செயற்குழு விவாதங்கள் காரசாரமாக்குவது நல்ல தல்ல என்பதற்காகவும், அதுபோன்ற ஒரு நிலைமையைத் தவிர்ப்பதற்காகவும் இந்த முடிவைத் தவிர்வேறு வழி இல்லாமல் போய்விட்டது."

கேள்வி:—" எம். ஜி. ஆர். செயற்குழுவில் கலந்துகொள்ளலாமா?"

கலைஞர்:—" கழகத்தில் யார் 'என்வேண்டு' செய்யப்பட்டனும் கலந்துகொள்ளமுடியாது."

கேள்வி:—"நடவடிக்கை குறிந்து அதிகாரபூர்வமான தகவல் வரவில்லை என்று எம்.ஜி.ஆர். கூறியிருக்கிறாரே?"

நாவலர்:— " மதியுத் தரவில் அனுப்பப்பட்டிருக்கிறது."

கேள்வி:—' இந்த நடவடிக்கை காரணமாகக் கழகத்துக்குப் பாதிப்பு ஏற்படுமா?"

கலைஞர்:—"சில இடங்களில் என்பதைத் அகற்றியும், கழகக் கொடிகளை இறக்குவதுமான காரியங்களில் எம். ஜி. ஆர். ரசிகர் மன்றங்கள் செயல்படுவதாகச் செய்திகள் வந்துள்ளன; இதை, இப்போதுதான் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது; சில இடங்களில் வத்துப் பதினாறு நாட்களாக இந்தக் காரியங்களை எம். ஜி. ஆர். மன்றத்தினர் பல இடங்களில் நடத்தியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளன; 'ஒதுமைச்சர் மகனியை இராஜாஜி செய்ய வேண்டும்' என்று 15 நாட்களுக்கு முன்பே மதுரை எம் ஜி.ஆர். ரசிகர் மன்றத்தினர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்; அதை எல்லாப் பத்திரிகைகளும் வெளியிட்டிருக்கின்றன; கழகத் தலைவரும் -- முதலமைச்சருமான என்னைக் கண்டித்தும்--தூக்கியும் -- கழகத்தை இழிவுபடுத்தியும் தர்மபுரி, புதுச்சேரி, மண்டராவாடை, மதுரை மற்றும் சில ஊர்களில் உள்ள எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றத்தினர் கூடாத சில நாட்களாகவே துண்டு அறிக்கைகள் வெளியிட்டு வந்திருக்கின்றனர்; அதனால் இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதைப் பார்த்து நான் ஆச்சரியப்படவில்லை.

"நான் பலமுறை சொல்லியிருக்கிறேன் -- 'தி. மு. கழகம் இருது--இருக்கிறதுங்கு ஆண்டுக காலமாக எத்தனையோ தியாகிகளின் உழைப்பால் கட்டப்பட்டுள்ள கோட்டை என்று; அந்தக் கோட்டையின் காவலர்களாக இருக்கின்ற 15 இலட்சத்திற்கு மேற்பட்ட கழக உறுப்பினர்களும்--18,000-த்துக்கு மேற்பட்ட கிளைக் கழகங்களும்--அந்தக் கிளைக் கழகங்களுக்கு அடங்கி நடக்கின்ற பல்வேறு தணை மன்றங்களும்--5 ஆண்டுக்காலக் கழக ஆட்சியில் நயன் பெற்று வருகின்ற ஏழை எளிய மக்களும்--குடிசைவாசிகளும், தி. மு. கழகம் வலிமை இழந்து போகவிடமாட்டார்கள்."

கேள்வி:—" எம். ஜி. ஆர். ரசிகர் மன்றங்கள் கிளைக் கழகங்களுக்குப் போட்டியாகச் செயல்படுவதா?"

கலைஞர்:—" அன்மைக் காலத்தில் எம். ஜி. ஆர். ரசிகர் மன்ற நடவடிக்கைகள் அவ்வாறு அமைந்திருந்தன."

கேள்வி:—" எம். ஜி. ஆர். மன்றம், எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம் ஆகியவைகள் வெவ்வேறு எவையா?"

கலைஞர்:—" அன்னு மன்றம்-- நாவலர் மன்றம் என்பதுபோல அமைக்கப்பட்டது எம். ஜி. ஆர். மன்றம்; அவை பெருமளவாகு கழகத் தோழர்களாக இருக்கின்றனர்; ரசிகர் மன்றங்கள் என்பவை அப்படி அல்ல; அதனால் தான், கழகத் தலைவர்களின் படத்தை அகற்றுவது -- கழகக் கொடிகளை எரிந்து போன்ற செயல்களில் அவர்கள் ஈடுபடுகின்றனர்."

கேள்வி:— "நீங்கள் சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொண்டுவிட்டதாக அவர் (எம். ஜி. ஆர்.) கூறியிருக்கிறாரே?"

கலைஞர்:— "நாங்கள் என்றைக்கும் சர்வாதிகாரப்போக்குக் கொண்டவர்கள் அல்லர்; நானோ -- நாவலரோ, கட்சியின் எல்லாப் பிரச்சினைகளையும் --எங்கள் பிரச்சினையிலும் -- மற்றவர்கள் பிரச்சினையிலும் -- எந்த அளவுக்கு விட்டுக்கொடுத்திருக்கிறோம் என்பதை மக்கள் அறிவார்கள்.

"'ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவேன் -- அதைக் கழகச் செயற்குழு, பொதுக்குழு ஏற்றுக் கொள்ளவரவிட்டாலு, அந்தத் தீர்மானத்தைப் பொது மக்கள்முன கொண்டு செல்வேன் -- என்பது சனாயமாகாது என்பதுதான் எங்கள் கருத்தாகும்; சொத்துக் கணக்குக காட்டவேண்டும் என்பது பற்றி எம். ஜி. ஆர். முன்பே சொல்லியிருக்கிறார்? -- கணக்குக் காட்டவேண்டும் என்பது பற்றி இதற்கு முன்பு அவர் எப்போதும் பேசியதும் இல்லை -- எழுதியதும் இல்லை; சில நாட்களாக மட்டும் ஏன் இப்படிப் பேசுகிறார் என்பது தெரியவில்லை; ஆனால் 1969 ஆகஸ்டு 27-ல் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழக அரசில்தான், 'அமைச்சர்கள் -- சட்டமன்ற உறுப்பினர்கள் -- அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோருடைய சொத்துக் கணக்குகளைக் காட்டவேண்டும்' என்ற தீர்மானத்தை நானே அவையில் முன மொழிந்து-- அது நிறைவேற்றப்பட்டு 3 ஆண்டுக்காலமாகத் தொடர்ந்து அந்தக் கணக்குகள் அவையில் வைக்கப்பட்டு வருகிறது.

"அமைச்சர்கள் -- சட்டமன்ற உறுப்பினர்கள் தவிர நடாளுமன்ற தி. மு. கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சிமாநகராட்சி மேயர்ற அதிகாரப் பூர்வமான இடங்களில் பதவி வகிக்கின்ற கழகத் தோழர்கள், சட்டமன்றக் கணக்குகளை வைக்க முடியாது என்பதால், அவைகளைச் செயற்குழு -- பொதுக்குழுவில் வைப்பதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி நாங்கள் யோசித்துக் கொண்டுதான் இருக்கிறோம்; நகராட்சிகளில் பதவி வகிக்கும் கழகத் தோழர்கள், அந்த அந்த நகராட்சி மாமன்றங்களிலே கணக்கு வைக்கலாமா என்பது பற்றியும், 'நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொத்துக் கணக்குக் காட்ட வேண்டும்' என்ற முறை நாடாளுமன்றத்தில் இலைாத காரணத்தினுல், அவைகளாவு பொதுக் குழு -- செயற்குழுவில் வைக்கலாமா என்பது பற்றியும் நான் கூடுகின்ற செயற்குழு பரிசீலிக்கத்தான் இருக்கிறது.

இதற்கிடையே, கிளைக் கழகச் செயலாளர்கள் -- வட்டச் செயலாளர்கள் ஆகியோர் மீதெல்லாம் ஏதோ ஜாழல் குற்றத்தைச் சுமத்துவது போலப் பேசியும் -- அதற்கான தீர்மானத்தைக் கொண்டு வரப்போவதாகச் சொன்னதும் -- அதை ஏற்காவிட்டால் பொதுக்கூட்டச் சந்திப்பேன் 'என்று கூறியதும் -- எந்த வகையிலும் கட்சிக்கட்டுப்பாட்டுக்கு உகந்தது ஆகாது.

"27 ஆண்டுக்காலமாக என்னுடைய இனிய நண்பராக -- கல்வித் துறை, தொழில் துறை, அரசியல் துறை ஆகியவற்றில் என்னுடன் மறுவிய ஒருவரைக் காப்பாற்றுவதைவிட -- என்னைக் காப்பாற்றிக் கொள்வதைவிட-- நானும் அவரும் சரர்ந்துள்ள கழகத்தைக் காப்பாற்ற முயற்சியுதான் அண்ணு கற்றுத் தந்த கடமையாகும்; அதனால், எவ்வளவோ வேதனைகளுக்கு கிடையே நானும் -- நாவலரும் இத்தகைய முடிவு எடுக்க வேண்டியதாயிற்று."

கேள்வி:—" இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு முன்பாகவே கூடிப் பேசி சமரசு முடிவு எடுத்திருக்கக் கூடாதா?"

கலைஞர்:—" நானே பலமுறை அவரிடத்தில் சொல்லியிருக்கிறேன் -- 'எதுவானலும் சேரில பேசிக்கொள்ளலாம்; பொதுக் கூட்டங்களில் பேசாதீர்கள்' என்று; ஆனால் அவர், என்னையும் -- பொதுச்செயலாளரையும் வைத்துக்கொண்டே தலைமைக் கழகக் கூட்டத்திலும், வேறு பல பொதுக்கூட்டங்களிலும் பல பிரச்சினைகளைக் கலிர்க்கமாகவே பேசியிருக்கிறார்; எத்தனையோ பிரச்சினைகளை எத்தனையோ முறைகளுக்கிடத்தில் தனியாகப் பேசிக் சருத்தொற்றுமையுடன் காரியமாற்ற முடிந்திருக்கிறது; ஆனால் சில நாட்களாக ஏன் இப்படிப் பேசுகிறார் என்று எனக்கே தெரியவில்லை."

கேள்வி:—' மனோகரன் செயற்குழுவுக்கு வரலாமா?"

கலைஞர்:— "தாராளமாக வரலாம்."

கேள்வி:—" அழைப்பு அனுப்பப்படுக்கிறதா?"

நாவலர்:— " அனுப்பப்பட்டிருக்கிறது."

கேள்வி:—" எம். ஜி ஆருக்கும் -- கழகத் தலைவர்களுக்கும் இடையே இனி மேலாவது சமரசம் ஏற்படுவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா?"

கலைஞர்:— " அது அவரைப் பொறுத்தது."

கேள்வி:—" இந்தப் பிரச்சினைகளெல்லாம் மறந்துவிடலாம் -- எலலோரும் ஒற்றுமையாக இருக்கலாம்--என்று எம்.ஜி.ஆர். சொன்னால், அதை ஏற்றுக் கொள்வீர்களா?"

கலைஞர்:—" நான் அல்ல கழகம்; எம்.ஜி ஆரிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது; அவர் பதில் கடிதம் எழுதட்டும்."

கேள்வி:— " எம் ஜி ஆர். இப்படிப் பேசுவதற்கு அரசியல் காரணம் உண்டா?"

கலைஞர்:—" எனக்குத் தெரியாது என்று நான் முன்பே கூறியிருக்கிறேன்; நிருபர்கள் எவ்வளவோ முயிக்கக்கூடியவர்கள்; எவ்வளவோ அவர்கள் முகித்துக் கொள்ளலாம்."

கேள்வி:—' செயற்குழு--பொதுக் குழுவில் வர இருக்கின்ற சொத்துக் கணக்கு விவரம் பற்றி எம். ஜி. ஆரிடம் பேசியிருக்கிறீர்களா?"

கலைஞர்:—" கழகப் பொறுப்பில் உள்ளவர்கள் ஏற்கனவே பல முறை இதுபற்றி விவாதித்துக் கிறோம்; ஆனால், 'வட்டச் செயலாளர்கள் கணக்குக் காட்ட வேண்டும்' என்று அவர் இப்போது புதிதாகச் சொல்லியிருக்கிறார்; அப்படி எந்தக் கட்சியிலும் இருப்பதாகத் தெரியவில்லை."

15-ந் தேதி பொதுக்கூட்டம்

"பொதுக்குழுக் கூட்ட முடிவுகளை விளக்குவதற்காக ஆக. 15-ந் தேதி பொதுக்கூட்டம் நடக்கும்."

நிர்வாக ஆசிரியர்: மு. கருணாநிதி. நடை: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., வடிவேலு ஆகியோர்களும், வெளியீடுகளையும், கவிஞர் வைரமுத்து கோவை; ஆதித்தன் (தி.மு. ஒன்றியம் — [illegible] சென்னை-2) அவர்களால் வெளியிடப்படுகிறது.